திரு ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : 1969-ல் மருத்துவக் கல்லூரிக்குத் தேர்வு செய்ததன் சம்பந்தமாக ஒரு கேள்வி கேட்டேன். நண்பர் திரு. அய்யாசாமி அவர்கள் இந்தக் கேள்வியைத் கொடுப்பதற்கு முன்பு அனுப்பி னேன். இன்னும் பதில் வரவில்லை, என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

MR. CHAIRMAN : Questions 56 and 57 are postponed.

University Grants Commission Scales of Pay.

*** 58. *Q.*—THIRU M. RAJAH IYER : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :**

(*a*) whether all the private Colleges in the State have implemented the University Grants Commission Scales of Salary to their staff ; and

(*b*) if not, the reasons therefor ?

பல்கலைக் கழக ஆணைக்குழு சம்பள வீதங்கள்

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்——

(அ) இம்மாநிலத்தில் உள்ள தனியார் கல்லூரிகள் அனைத்தும் பல்கலைக் கழக ஆணைக்குழு சம்பள வீதங்களைத் தத்தம் ஆசிரியப் பணி யாளர்களுக்கு அளிக்கின்றனவா?

(இ) இல்லை எனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

THIRU G. VASANTHA PAI : Sir, will the Hon. the Minister for Education be pleased to state whether even in the Government Colleges 25 per cent of the language staff have been upgraded as per the recommendations of the University Grants Commission ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரம் இல்லை. 25 சத வீதம் ஒதுக்கச் சொன்னார்களா, அது நிறைவேற்றப்பட்டதா என்பது சம்பந்தமாகக் குறிப்பில்லை. தனிக் கேள்வி போட்டால், விவரம் சொல்லலாம்.

Water-Supply to the Government Erskine Hospital, Madurai

*** 59. *Q.*—THIRU M. RAJAH IYER : Will the Hon. the Minister for Education and Health be pleased to state the steps so far taken and proposed to be taken to ensure unfailing water-supply to the Government Erskine Hospital, Madurai ?**

அரசினர் எர்ஸ்கின் மருத்துவ மனை, மதுரை

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்——

மதுரையில் உள்ள அரசினர் எர்ஸ்கின் மருத்துவ மனைக்கு தட்டின்றி நீர் கிடைக்கச் செய்வதற்காக இதுவரை எடுத்துள்ள நடவடிக்கைகளும் இனிமேல் எடுக்கக் கருதும் நடவடிக்கைகளும் யாவை ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன்: மதுரை அரசு எர்ஸ்கின் மருத்துவமனையின் எல்லைக்குள் நிறைய துளைக் கிணறுகளை அரசு அமைத்துள்ளது. மதுரை ரோட்டரி சங்கம் இரண்டு ஆழமான துளைக் கிணறுகளை மருத்துவமனை சுற்றுப் பகுதிக்குள் நிறுவியுள்ளது. T. V. S. நிறுவனம் ஒரு துளைக் கிணறைச் செப்பனிட்டது. இத் துளைக் கிணறுகள் எல்லாம் வேண்டிய அளவு நீரை அளிக்கின்றன. மருத்துவ மனையில் தண்ணீர் பற்றுக்குறை கணிசமான அளவில் தீர்ந்துவிட்டது என அறிவிக்கப்பட்டுள்ளது.